தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

ஜய, ஆடி 26, திருவள்ளுவர் ஆண்டு—2045

2014 ஆகஸ்ட் 11, திங்கட்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

“மாறுபாடு இல்லாத உண்டி மறுத்துஉண்ணின்
ஊறுபாடு இல்லை உயிர்க்கு.”

தன் உடலுக்கு ஏற்காத உணவை விலக்கி, அளவோடு உண்ண வேண்டும். அவ்வாறு பசி அறிந்து, அளவோடு உண்டு வாழ்பவருடைய உடலில் உயிர் வாழ்வதற்குத் தடையாக இருக்கும் நோய்கள் உண்டாகா.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள். வினா வரிசை எண் 390, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.என். கிட்டுசாமி, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

390—

கதவணை

***43207—திரு. ஆர்.என். கிட்டுசாமி:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2014 ஆகஸ்ட் 11

(அ) மொடக்குறிச்சி தொகுதி, கருவேலம்பாளையத்திற்கும், நாமக்கல் மாவட்டம், ஜேடர்பாளையத்திற்கும் இடையே காவேரி ஆற்றின் குறுக்கே கதவணை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் மேலான அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.*

*(அ) மற்றும் (ஆ) மொடக்குறிச்சி தொகுதி, கருவேலம்பாளையத்திற்கும், நாமக்கல் மாவட்டம், ஜேடர்பாளையத்திற்கும் இடையே காவேரி ஆற்றின் குறுக்கே, பவானி கட்டளை கதவணை மின் திட்டங்கள் பகுதி–II இல், ஒவ்வொன்றும் தலா 2x5 மெகா வாட் நிறுவுதிறன் கொண்ட 4 கதவணை மின் திட்டங்கள் நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த 4 திட்டங்களில் முதல் திட்டமான மொடக்குறிச்சி தொகுதி, கருவேலம்பாளையத்திற்கும், நாமக்கல் மாவட்டம், ஜேடர்பாளையத்திற்கும் இடையே காவேரி ஆற்றின் குறுக்கே பவானி கட்டளை கதவணை மின் திட்டம், ஏறத்தாழ 120 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கான விரிவான திட்ட அறிக்கை (*Detailed Project Report*) தயாரிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்குத் தேவையான ஒப்புதல் பெறப்பட்டு, மூன்றாண்டு காலங்களில் பணிகள் முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.என். கிட்டுசாமி அவர்கள்.*

திரு. ஆர்.என். கிட்டுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இருண்ட தமிழகத்தை ஒளிபெறச் செய்தவர், நம்முடைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில், தமிழ்நாடு மின்சார வாரியம் இருளிலே மூழ்கித் தள்ளாடியது. மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் முதலமைச்சராக இருந்த திரு. கருணாநிதியும், மின்சாரத் துறை அமைச்சராக இருந்த திரு. ஆற்காடு வீராசாமியும் இதுகுறித்து எந்த முயற்சியும் எடுக்காமல், மானாட, மயிலாட பார்ப்பதிலும்,*

2014 ஆகஸ்ட் 11]

திரைப்படங்களுக்குக் கதை, வசனம் எழுதுவதிலும் காலத்தைக் கழித்தார்கள். ஏற்கெனவே, மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில் கொண்டுவந்த திட்டங்கள், கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் கிடப்பிலே போடப்பட்டன. ஆனால், மூன்றாவது முறையாகத் தமிழ்நாடு முதலமைச்சராகப் பொறுப்பேற்ற, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அந்தத் திட்டங்களையெல்லாம் இன்றைக்குச் செயல்படுத்தியும், புதிய திட்டங்களை உருவாக்கியும் தமிழ்நாடு மின்சாரத் துறையை மீட்டெடுத்திருக்கிறார்கள். ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி தொகுதியில் கருவேலம்பாளையத்திற்கும், ஜோடர்பாளையத்திற்கும் இடையிலே காவேரி ஆற்றின் குறுக்கே கதவணை அமைக்கும் திட்டம் அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்ட திட்டமாகும். இப்போது மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள், அந்த மின் திட்டம் துவக்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்கும், மொடக்குறிச்சி தொகுதி மக்களின் சார்பாக என்னுடைய மனமார்ந்த நன்றியினை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், அந்தக் கதவணை வழியாக இருசக்கர வாகனங்கள் மட்டும் செல்கின்ற வகையில் திட்டம் செயலாக்கப்பட்டிருக்கின்றது. அந்தப் பாதையை கனரக வாகனங்கள் செல்கின்ற வகையிலே, பேருந்துகள் செல்கின்ற வகையிலே அகலப்படுத்திக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே காவேரி ஆற்றின் குறுக்கே, பவானி கட்டளை கதவணைத் திட்டம்–4 மற்றும் ஈரோடு மாவட்டம், கருவேலம்பாளையத்திற்கும் நாமக்கல் மாவட்டம், ஜேடர்பாளையத்திற்கும் இடையே பவானி கட்டளை கதவணைத் திட்டம்–4 என இப்போது 2x5 மெகா வாட் திறன் கொண்ட அலகுகளுடன், 10 மெகா வாட் திறன் கொண்ட மின் உற்பத்தி அங்கே தொடங்கப்படவிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க, அந்தக் கதவணைத்

திட்டத்திலே இரண்டு ஆற்றைக் கடக்கின்றபோது, அங்கே சிறிய வாகனங்கள், இலகு ரக வாகனங்கள் மட்டும் செல்வதற்கு ஏற்பாடு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. அங்கு கனரக வாகனங்கள் செல்வதற்குண்டான வசதியை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். இப்பொழுது போடப்பட்டிருக்கின்ற அந்தக் கதவணைத் திட்டத்தில், இலகு ரக வாகனங்கள் மட்டும் செல்வதற்குண்டான மதிப்பீடு தயார் செய்யப்பட்டிருக்கிறது. கனரக வாகனங்கள் செல்கின்ற அளவுக்கு, கதவணைத் திட்டத்தை விரிவுபடுத்துகின்றபோது, மதிப்பீட்டுத் தொகை கூடுதலாகும். இத்திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யும் பணி நடைபெற்று வருகிறது. கனரக வாகனங்கள் செல்வதற்கேற்ற வகையில், திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு வேண்டிய ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டுமென்று விரிவான திட்ட அறிக்கை தயார் செய்பவர்களிடம் கேட்டுக்கொண்டு, அதனடிப்படையில், சாத்தியக் கூறுகள் இருப்பின், நிதிநிலைக்கேற்ப, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்து, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு சென்று, அவர்களின் ஆணையைப் பெற்று, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.என். கிட்டுசாமி அவர்கள்.*

திரு. ஆர்.என். கிட்டுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பாதையை அகலப்படுத்துகின்றபொழுது, ஈரோடு மாவட்டத்திற்கும், நாமக்கல் மாவட்டத்திற்கும் இடையே போக்குவரத்துக்கு, பொது மக்களுக்கு பெரும் வசதியாக இருக்கும். அங்கிருந்து சேலம் மாவட்டத்திற்குச் செல்வதற்கும், நாமக்கல் மாவட்டத்திலே இருக்கின்ற பரமத்திவேலூர், வேலாயுதம்பாளையம், நாமக்கல் போன்ற ஊர்களுக்குச் செல்வதற்கும் மிக வசதியாக இருக்கும். இப்பொழுது அங்கே செல்ல வேண்டுமென்று சொன்னால், கொடுமுடி வழியாகத்தான் செல்ல வேண்டும். அப்படிச் செல்கின்றபோது, 40 கிலோ மீட்டருக்கு மேல் அதிகமான தூரம் இருக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு அம்மா அவர்களுடைய கருணைப் பார்வைக்கு எடுத்துச் சென்று, உரிய

2014 ஆகஸ்ட் 11]

நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவித்தமைக்கு மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர், மாண்புமிகு உறுப்பினர் நன்றி சொல்லிவிட்டார்.

திரு. ஓ.கே. சின்னராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, எனது மேட்டுப்பாளையம் நகராட்சிப் பகுதியை ஒட்டிச் செல்கிற பவானி ஆற்றின் குறுக்கே அம்மா அவர்களின் கடந்த ஆட்சிக் காலத்திலே, 2005–லே 2 கதவணைத் திட்டங்கள் துவக்கப்பட்டு பணிகள் வேகமாக நடந்தன. அதற்குப் பின்னாலே ஐந்தாண்டுக்காலம் தி.மு.க. ஆட்சியிலே அதைக் கிடப்பிலே போட்டுவிட்டார்கள். அதற்குப் பின்னால் அம்மா அவர்கள், இந்த மூன்றாண்டு காலத்திலே, போர்க்கால அடிப்படையிலே அந்தத் திட்டத்தை நிறைவேற்றியதன் காரணமாக, இன்றைக்கு ஒரு கதவணைத் திட்டத்தில் மட்டும் மின் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. இன்னும் ஒரு மின் உற்பத்தித் திட்டம் பயனுக்கு வருகிற நிலையில் இருக்கிறது. ஒரு கதவணைக்கு ரூ.140 கோடி என்ற விதத்திலே ரூ.250 கோடி மதிப்பீட்டிலே துவக்கப்பட்ட திட்டம், இன்றைக்கு முடிவடையும் தருவாயிலே உள்ளது. ஆகவே, அந்தத் திட்டங்களை தமிழகத்தின் விடிவெள்ளியாக விளங்குகிற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திருக்கரத்தால் விரைவிலே துவக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மேலும், குன்னூர் அணையிலிருந்து மேட்டுப்பாளையம் வருகிற வழியிலே பவானி ஆற்றின் பிற பகுதிகளிலே தடுப்பணைகளைக் கட்டி, அதன் மூலமாக மின் உற்பத்தி செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட அந்தக்

[2014 ஆகஸ்ட் 11

கதவணை மின் திட்டம் ஏற்கெனவே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே திட்டமிடப்பட்டு, இடையிலே கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியிலே காலதாமதப்படுத்தப்பட்டது. இப்போது மீண்டும் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பின்னர், அந்தத் திட்டத்தை விரைவாகச் செயல்படுத்தி, நிறைவேற்றி முடித்திருக்கிறார்கள். மற்றொரு கதவணைத் திட்டத்தையும் விரைவாக முடிக்க, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உறுதியான நடவடிக்கை எடுத்து, விரைவாக நிறைவேற்றும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல, ஏற்கெனவே, பவானி ஆற்றின் குறுக்கே பவானி ஆறு கூடுமிடத்திற்குக் கீழே 10 மெகா வாட் திறன் கொண்ட 3 கதவணைத் திட்டங்கள் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டு, 30 மெகா வாட் மின்சாரம் கிடைத்துக்கொண்டிருக்கிறது. பகுதி 1, பகுதி 2, பகுதி 3 ஆகிய கதவணைத் திட்டங்கள் ஏற்கெனவே முடிவடைந்திருக்கின்றன. இப்பொழுது, மாண்புமிகு அம்மாவினுடைய ஆணையின்பேரில், நான்கு புதிய கதவணைத் திட்டங்களை உருவாக்குவதற்கு கருத்துருக்கள் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன. அதிலே ஒன்றுதான், ஈரோடு மாவட்டம், கருவேலம்பாளையத்திற்கும், நாமக்கல் மாவட்டம், ஜேடர்பாளையத்திற்கும் இடையே காவேரி ஆற்றின் குறுக்கே கதவணை அமைக்கும் திட்டமாகும். இந்தத் திட்டத்தை, இந்த ஆண்டிலே எடுத்துக்கொள்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை தமிழ்நாடு மின்சார வாரியம் எடுத்து வருகின்றது. அதற்கான ஆய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

முற்பகல் 10–10

இதற்கு அடுத்த கட்டமாக, பவானி கட்டளை கதவணைத் திட்டம் 5 ஊஞ்சலூர் அருகிலும்; பவானி கட்டளை கதவணைத் திட்டம் 6 தவிட்டுப்பாளையம் அருகிலும்; பவானி கட்டளை கதவணைத் திட்டம் 7 நன்னியூர் அருகிலும்; ஒவ்வொன்றும் தலா 10 மெகா வாட் நிறுவுதிறன் கொண்ட மொத்தம் 40 மெகா வாட் மின் திட்டங்கள் நிறுவுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டங்களை நிறைவேற்றுகின்றபோது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ள அந்தக் கதவணைத் திட்டத்தையும் ஆய்வு செய்து, அந்த ஆய்வின் அடிப்படையிலே, நிதிநிலைக்கு ஏற்ப, மாண்புமிகு அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு சென்று, உரிய ஆணைகள் பெற்று, அந்தத்

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2014 ஆகஸ்ட் 11]

திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. தனியரசு அவர்கள்.*

திரு. உ. தனியரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வி மொடக்குறிச்சி தொகுதி, கருவேலம்பாளையத்திற்கும், நாமக்கல் மாவட்டம், ஜேடர்பாளையத்திற்கும் இடையே காவேரி ஆற்றின் குறுக்கே கதவணை அமைப்பது குறித்தது. என்னுடைய பரமத்திவேலூர் சட்டமன்றத் தொகுதியில்தான் ஜேடர்பாளையம் இருக்கின்றது. மக்கள் அடர்த்தியாக வாழ்கின்ற பகுதி அது. குறிப்பாக, காவேரி ஆற்றோர விவசாயிகளும், விவசாயம் சார்ந்த தொழிலாளர்களும் அந்தப் பகுதியில் மிக அடர்த்தியாக வாழ்ந்து வருகின்றார்கள். கனரக வாகனங்கள் செல்லக்கூடிய அளவுக்கு அந்தக் கதவணையினுடைய பாலத்தின் அகலத்தை விரிவுபடுத்த வேண்டுமென்று, நாமக்கல் மாவட்ட மக்கள் நீண்டநாட்களாக கோரிக்கை வைத்து வருகிறார்கள். இந்தக் கோரிக்கையையும் கதவணை அமைக்கக் கோரும் கோரிக்கையோடு இணைத்து பரிவோடு பரிசீலிக்க வேண்டுமாய் மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியிலே வருங்காலத்தில் அமைக்கப்பட வேண்டிய திட்டங்கள் குறித்துச் சொன்னேன். ஊஞ்சலூர் அருகிலும், தவிட்டுப்பாளையம் அருகிலும், நன்னியூர் அருகிலும் கதவணைகள் அமைக்கப்படவிருக்கின்றன.*

பொதுவாகவே, கதவணை மின் திட்டத்தைப் பொறுத்தவரையிலே, சாதாரணமாக ஒரு மெகா வாட் மின்சாரத்திற்கு இரண்டு மடங்கு கூடுதல் செலவாகும். பொருளாதாரரீதியாகப் பார்த்தால், இதிலே நமக்கு இலாபம் இருக்காது. அது நமக்கு சாத்தியமாக இருக்காது. இருந்தாலும்கூட, அந்தத் திட்டம் பொது மக்களுக்கு மட்டுமின்றி, விவசாயத்திற்கும் பயன்படுகிறது.

அதேபோல, போக்குவரத்து வசதியைப் பொறுத்தவரையில், இந்தப் பகுதியிலேயிருந்து காவேரி ஆற்றைக் கடப்பதற்கு பாலம் அமைப்பது multi–purpose *ஆகும். பல்வேறு பயன்பாடுகளைத் தருகின்ற வகையிலே அமைந்துள்ள காரணத்தினால், செலவு சற்றுக் கூடுதலாக இருந்தாலும்கூட, மதிப்பீடு ஒரு மெகா வாட்டுக்கு ஏறத்தாழ 12 கோடி ரூபாய் வீதம் இரண்டு மடங்கு செலவாக இருந்தாலும்கூட, போக்குவரத்து வசதிகளைக் கவனத்தில் கொண்டு, கதவணை மின் திட்டங்கள் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் அமைக்கப்படுகின்றன.*

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தப் பகுதிக்குப் போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்துகின்ற வகையிலே கதவணையில் பாலத்தின் அகலத்தை அதிகப்படுத்த வேண்டுமென்று கோரியுள்ளார்கள். ஏற்கெனவே இலகு ரக வாகனங்கள் செல்வதற்கு மதிப்பீடுகள் தயார் செய்தாலே, மெகா வாட்டுக்கு 12 கோடி ரூபாய் ஆகிறது. கனரக வாகனங்கள் செல்கின்ற வகையிலே, இன்னும் அந்தத் திட்டத்தை விரிவாக்கும்போது செலவு அதிகம் ஆகும் என்று கருதுகிறேன். இருந்தாலும்கூட, multi–purpose, *பல நன்மைகளைத் தருகின்ற திட்டமாக இருப்பதால், மின்சார வசதி மட்டுமல்லாமல், விவசாயத்திற்கு மட்டுமல்லாமல், மிக அதிகமாக போக்குவரத்திற்கும் பயன்படும் என்ற வகையிலே, கூடுதல் செலவு வந்தாலும்கூட, அதுகுறித்து ஆய்வு செய்து, மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆணையைப் பெற்று, அதை நிறைவேற்றுவதற்கு வேண்டிய முயற்சிகளை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 391, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

391—

மேம்பாலம்

***1819—திரு. அ. கணேஷ்குமார்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—